**செய்தி வெளியீடு** **நாள் : 23.10.2025**

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் சிஎம்டிஏ சார்பில் சுமார் ரூ.40 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் பணிகள் இதுவரை சுமார் 70% பணிகள் நிறைவடைந்துள்ளன, மீதமுள்ள பணிகள் வருகின்ற வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்படும். மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவின்படி இன்று (23.10.2025) விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாக பிரதான சாலைகளான E, A மற்றும் B சாலைகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :**

சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்திற்கு வருகை தரும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்களின் நலன் கருதியும், விழா காலங்களில் இரு மடங்காக உயரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும், சாலை வசதிகள், பெருமழை மற்றும் வெள்ள காலங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கான விரிவான திட்டமிடல் மற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ருகின்றன.

**முக்கியத் திட்டங்கள் மற்றும் பணிகள்:**

விரிவான மழைநீர் வடிகால் பணிகள் கடந்த ஆண்டு கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் நான்கு சாலைகள் (A, B, E மற்றும் காளியம்மன் தெரு உள்ளிட்ட பகுதிகள்) மழைநீர் கால்வாய் பணிகள் தொடங்கப்பட்டன. இதில் சிஎம்டிஏ சார்பில் சுமார் ரூ.40 கோடி செலவில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 70% பணிகள் நிறைவடைந்துள்ளன.

**தேசிய நெடுஞ்சாலை (NHAI) அனுமதி**:

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி பகுதியில் சுமார் 250 மீட்டர் அளவிற்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் (NHAI) அனுமதி பெற வேண்டியிருந்த சூழலில், துறையின் செயலாளர், உறுப்பினர் செயலர் (MS) மற்றும் தலைமைச் செயல் அலுவலர் (CEO) ஆகியோர் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் (NHAI) அதிகாரிகளை அணுகி, தற்போது அந்த அனுமதி பெறப்பட்டுள்ளது. சாலையின் குறுக்கே மழைநீர் வடிகால் அமைக்கும் பணி துரிதமாகத் தொடங்கப்படும்.

**சென்னை மெட்ரோ ரெயில் (CMRL) பணி ஒருங்கிணைப்பு**:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் (CMRL) பணி நடைபெறுவதால், அதன் யார்டுக்கு உட்பட்ட இடத்திற்கு வரும் மழைநீரும் தரைமட்டப் பாலம் வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. இதற்காக வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**உயர்மட்ட கள ஆய்வு:**

Verified @ RealEstate™

இந்தப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய, ஓரிரு நாட்களில் CMRL-ன் மேலாண்மை இயக்குநர் திரு.சித்திக் அவர்களும், துறையின் செயலாளர் மற்றும் துறை அமைச்சர் ஆகியோரும் கள ஆய்வை மேற்கொள்ள உள்ளோம்.

**விரைவுப்படுத்தப்பட்ட பணிகள்:**

அடுத்த மாதம் டிசம்பரில் பெருமழை, வெள்ளம் ஏற்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளதால், தற்போது மழை நின்றுள்ள நிலையில், வடிகால் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, டிசம்பர் மாதத்தில் போக்குவரத்து நெரிசல் மற்றும் தண்ணீர் தேக்கம் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பணிகள் நிறைவடையும்போது, சந்தைக்கு வருபவர்களுக்கும் போக்குவரத்திற்கும் பயன்படும் பாதைகள் சீரமைக்கப்படும்.

**சாலை சீரமைப்பு:**

ஆய்வில் கூடுதலாகத் தேவைப்படும் வசதிகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. ஆங்காங்கே மேடு பள்ளங்களாக உள்ள சாலைகளைச் சீரமைக்க பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் குண்டும் குழியுமாக உள்ள சிறிய பகுதிகளிலும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**கோயம்பேடு சந்தையில் தூய்மை குறைபாடுகள் குறித்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்:**

பயன்படுத்தப்படும் பொருட்களின் தன்மை காரணமாக, மழைக்காலங்களில் கெட்டுப் போன காய்கறிகள் சகதியாக மாறுவது உண்மைதான். இதைத் தீர்க்க, கோயம்பேட்டிற்குத் தனிப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (DRO) நியமிக்கப்பட்டுள்ளார். வரும் காலங்களில், அதிகமான உழைப்பு ஆட்களை (Manpower) சேர்த்து, சந்தையின் தூய்மையைப் நிரந்தரமாகப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**ஆறு மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலை பாதிப்பு குறித்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்:**

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கனரக வாகனங்களின் பயன்பாடு மற்றும் மழைநீர் தேக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இது தேசிய நெடுஞ்சாலை என்பதால், தரமற்ற நிலை இருந்தால், போர்க்கால அடிப்படையில் ஆய்வு செய்து மீண்டும் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் துறைப் பணிகளையும் உறுதி செய்து செயல்படுத்துவார்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

மக்கள் பெருமழை, வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மக்களுக்கு எந்தவித அச்சுறுத்தலும் இருக்காது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, சிஎம்டிஏ முதன்மைச் செயல் அலுவலர் திரு.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.கிருஷ்ணமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கோயம்பேடு அங்காடி முதன்மை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திரு.லோகு மற்றும் பல்வேறு துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified @ RealEstate ™